பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்—திருக்குறள்.

தொகுதி க. } 1916௵ மார்கழி௴ } பகுதி. உ.

புதல்வர் கடமை.

என்றேனும், எவராயினும், நமக்கு அற்ப உதவியே செய்யினும், அவ்வற்ப உதவியையும் உயிருள்ளளவும் மறக்கலாகாது. அவ்வுபகாரிக்கு எக்காரணம் பற்றியேனும், எவ்வளவு பெருந் துன்பம் வந்தபோதும், நாம் நமது பொருள், மனம், வாக்கு, காயம் என்னும் இவைகளால் இயன்ற உதவி புரிந்தே தீரவேண்டும்.

பொருளால் உதவி செய்தலாவது, பசி பிணி முதலியவற்றாலும் ஆடை முதலியன இல்லாமையாலும் அவர்கள் வருந்துவதைக் காணினும், கேட்பினும், பொருள் மூலமாக அவ் வருத்தத்தைப் போக்கல் ஆகும். மனத்தால உதவி செய்தலாவது, அவர்கள் நோயுற்றபோதும், சங்கடங்களுக்குள் அகப்பட்டுத் தவிக்கும் பொழுதும், அவர்கள் சுக வாழ்வெய்தவும், துன்பம் நீங்கவும், மனப்பூர்வமாய் ஈசுவரனை வேண்டல் ஆகும். வாக்கால் உதவி புரிதலாவது, அவர்கள் அறியாமை காரணமாகச் சங்கடத்திற்குள்ளாயிருப்பின், அவர்களுக்கு நல்லுபதேசம் செய்து நல்வழிப்படுத்தலும், தமகுள்ள செல்வாக்கால் அவர்கள் குறைகளை நீதிக்கு விரோதமின்றி நிவர்த்தித்தலும் ஆகும். காயத்தால் உதவி புரிதலாவது தமது சரீரத்தாலும், அவசியம் ஏற்படின், உயிரையும் கொடுத்தும், அவர்களைத் துன்பத்தினின்றும் நீக்கலாகும். இவ்வளவும், "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்" கொள்ளும

உத்தமோத்தமர்களாகிய பயன் தெரிவார் பண்பாகும். சாமானிய ஜனங்கள், முற்கூறியவற்றில் எவ்வளவு தம்மாற் கூடுமோ, அவ்வளவும் செய்து தீரக் கடமைப்பட்டவராவர். நிற்க.

அற்ப நன்றியே செய்தோா, அது செய்த பிறகு, அறிந்தோ, அறியாமலோ நமக்கு என்றேனும், பலவிததும் பெருந் தீங்கே செய்த காலத்தும, நாம் அவர்கள் செய்த தீமையை நினையாது, அவர் முன் செய்த நன்மையையே கருதிப் பாராட்ட வேண்டும். இங்ஙனம் செய்வது அதிசுலபமான காரியம் என்பதைத் திருவள்ளுவநாயனார்,

> கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
> நன்றி ஒன்(று) உள்ளக் கெடும்

என்னும் குறளால் நன்கு விளக்கியுள்ளது சிந்திக்கத் தக்கது.

'அற்ப உதவி புரியும் அயலாரிடத்தும் முற்கூறிய இவ்விரு விதத்தும் ஒழுகுவது 'நன்றறியும் மாந்தர் கடன்' என்னில், நமக்குப் பெறற்கரிய தேகமும், ஜீவனும், பூலோக வாழ்வும் அளித்த பரம தாதாக்களும், கைம்மாறு கருதாது வளர்த்து நம்மை மதிப்பிற்குரிய மனிதர்களாகச் செய்த புண்ணியவான்களுமாகிய பெற்றோரிடத்து, நாம்நடந்து கொள்ள வேண்டிய விதமும், அவர்களுக்குச் செய்து தீர வேண்டிய கடமைகளும், இத்தன்மைய எனஎடுத்துரைக்க எவராலாகும்?

> "சின்னஓர் பொருளதந் தோரைச் சீவனுள் ளளவும் உள்ளத்
> துன்னவே வேண்டும்" என்ன உரைத்தனர் பெரியோர்; தேகம்
> தன்னை, ஆருயிரை, மேலாம் தரணியின் வாழ்வைத் தந்த
> அன்னைதந்தைக்குச்செய்யும் அருங்கைம்மா(று)உளதோ? அம்மா!

என்று உண்மையிற் தண்டுணர்ந்து கூறிய (மாயூரம் முன்ஸீபாக இருந்து, இறந்தும், இறவாப் புகழ்மிக் கெய்திய) ஸ்ரீ: வேதநாயகம் பிள்ளையின் ஓதரிய ஞானம்தான் என்னே!

நமது சுகதுக்கங்கள் யாவையும் தமது சுகதுக்கங்களாகவும், அவற்றினும் அதிகமாகவும், மனப்பூர்வமாக நினைந்து பாராட்டி, எவ்விதத்தாலும் நம்மால் மாறுதவி செய்யமுடியாப் பேருதவி புரிந்தருளிய பெருந்தகையாளர்களன்றோ நம் பெற்றோர்கள்! உண்மை

ஈதாக இருக்கவும், தற்காலத்து வாலிபர்களிற்பலர் நன்றி கெட்ட வர்களாகித் தமது மாதா பிதாக்களிடம் பயபக்தி விசுவாசமின்றி நடந்தும், செய்ந்நன்றி கொன்றோராகியும், மீளாநரகிற் காளாகி வருவது எவ்வளவு பரிதபிக்கத் தக்கது! வாலிபர்கள் மட்டுமென்? "சுயநயம்" என்ற பேய் வசப்பட்டு, ஆனவயதிற்கு அடையாளமின்றி நடந்து வரும், போலிப் பெரியோர்களான சிறியரினும் சிறியர் செய்து வரும் அடாத முறைகேடான செய்கைகள் எவ்வளவு அருவருக்கத் தக்கன!

ஆ! ஆ!! குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு போல் தம் தாய் தந்தையர் பேரையும் ஊரையும் சீரையும் கெடுக்க எத்துணை மூடாத்மாக்கள் தோன்றியிருக்கின்றனர்! கண்டோர் யாரும் காறி உமிழும்படியான காரியங்களைத் தாம் செய்யும் காலையில் எவரேனும் தடுத்து, "வேண்டாம், இது தகாத காரியம்" என்று நன்மொழி கூறிச் சற்புத்தி புகட்டினால் "போம் ஐயா! உம் வேலையை பாரும். உமக்கு ஒன்றும் தெரியாது! 'மகன் அறிவு தந்தை அறிவு,' 'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை,' 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்,' 'தந்தையினும் சதமடங்கு தநயன்' என்பவை போன்ற முதுமொழி நீர் அறியவில்லை போலும்!" என்று இவைபோற் பலகூறி, தம் பெற்றோர், என்றேனும், முக்குண வயத்தால் முறை பிறழ்ந்து ரகஸ்யமாகச் செய்த பழிச் செயல்களைப் பலர் அறியப் பறை சாற்றும் பறையர்கள் எத்துணைபேர்கள்! இத்துணைப் பழமொழிகளையும் மறவாமல் சமயம் நேர்ந்த பொழுது குருட்டுப்பாடமாக வாயிலெடுக்கும் இம்மந்த மதிகளுக்கு 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,' 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை,' 'ஈன்றாளின் என்ன கடவுளுமில்,' 'தந்தை தாய்ப்பேண்,' 'ஏவா மக்கள் மூவா மருந்து,' 'தாய் சொற் துறந்தால் வாசகமில்லை,' 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்பன போன்ற மகாவாக்கியங்களைக் கேட்கக் காதும், சொல்லத் தொண்டையும் அடைத்தது காலக் கொடுமையோ! ஞாலக் கொடுமையோ! அறியேம்.

இம்மட்டோ? "நாம் நமது பெற்றோரை நன்கு உபசரித்துத் தக்கவாறு வழிபட்டாலன்றோ, நாம் செய்வதை நம் மக்கள் பார்

தனுக் கொண்டிருந்து, நமக்குத் தளர்நிலை வந்தெய்திய காலத்தில், நமக்குரிய வழிபாடுகளைக் குறைவறப் புரிவர்" என்ற அறிவு சிறிதுமில்லா அற்பர்களுக்கு "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்பதன் உண்மையை இடித்துரைப்பாரில்லையே!

பின்னும் பாருங்கள்! தன்னையே துணையாகக் கொண்ட கணவனுக்குக் கீழ்ப்படியாது, அவனுக்குத் துரோகம் நினைக்கும் ஒருத்தி, துற்சனர் பலர்க்கு அடங்கி, அவர்கள் மனமகிழ நடந்து, நல்லபேர் எடுப்பதுபோல், ஈன்ற தாய் தந்தையர்க்குத் துரோகிகளாகி, அதன் நிமித்தம் அவர்களால் வெறுக்கப்பட்டு, மற்றோருக்கு நல்லவராக நடித்துக் காட்டும் நாணிலிகள் எத்தனைபேரை நாம் பார்க்கின்றோம்!

இவ்வளவேயோ? மனைவி சொற்கேட்டுத் தமை ஈன்ற தந்தை தாயரை, உண்ண உணவும், உடுக்க உடையுமின்றித் துரத்தி, வீடுகள் தோறும் பிச்சையெடுத்துண்ணும்படி விடுக்கும் பழிபாவங்கட்கஞ்சாப் பாதகர்கள் எத்தனை பேர்களை நாம் நாளும் காண்கின்றோம்.

பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும் யாவையும் இழந்து யாவையும் மறந்து, பெற்றோர்கள், மதிதளர்வும் பலக்குறைவும் எய்தியகாலத்தில்—தமக்கும் இனி, நரை, திரை, மூப்பு, சாக்காடு வருவது திண்ணம் என்பதைக் கனவிலும் கருதாது—அவர்களது அசக்தியினால் தமக்கேற்பட்ட சிரமம், அவர்களது மலஜலாதிகளால் நிகழ்ந்த அருவருப்பு முதலியவை காரணமாக, அவர்களை வாய்க்குவந்தபடி கடிந்துகொண்டு நிர்க்கதியாகப் பரிதவிக்கச் செய்யும் நீசர்கள் எத்தனை பேர்கள் உள்ளார்கள்!

அந்தோ! மக்கட்பேறின்மையால் துயருற்று வருந்தும் பெற்றோர் நிலைமையையும், அப்பேறு உற்றபின் அவர்கள் தம்மக்கட்குச் செய்துவரும் பேருதவியையும், அம்மக்கள் விஷயமாகத் அவர்கள் அடைந்துவரும் கஷ்டநிஷ்டூரங்களையும் இவர்களில் எவரேனும் உள்ளபடி உணர்ந்திருப்பின், ஒவ்வொருவரும்,

"ஈன்றுவளர்த்த தாய்தந்தைக்(கு) எவரே கைம்மா(று) இயற்றிடுவார்?
ஆன்றமதலை நூறுவய தளவும் அடிமைத்திறம் பூண்டு
மூன்றுபுவனத் துள்ளபொருள் முற்றும்அளித்து முறை முறையே
என்றவழிபா(டு) இயற்றிடினும் ஒருநாள் வளர்த்தற் கொவ்வாதே."

என்ற ஓர் வடநூற் புலவர் கூறியது உண்மையே எனத் தேர்ந்து நல்வழிப்படுவர் என்பது திண்ணம்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

நட்பு:— யதார்த்தமும், போலியும்.

[இது R. Barnfield என்ற மேற்றிசைப் புலவர் இயற்றிய "Every man that flatters thee etc."யின் தமிழ் மொழி பெயர்ப்பு.]

முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்(து)
அகம்நக நட்பது நட்பு—திருக்குறள்.

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.—மூதுரை.

உனைமுகம் எதிர்புகழ் ஒருவனும் நேயர்
*உற்றுழி உதவிசெய் உறவினன் ஆகான்.
வாயு என்ன வாய்மொழி எளிதே.
உற்றநண் பரைக்கண் ணுறலே அரிது.
○வியயம் செய்யத் திரவியம் உளவரை
நினக்கொவ் வொருவனும் நேசனாய் இருப்பன்.
உறுநிதி மட்டும் குறைவுறு மாயின்
நினது குறையினை நிரப்பிடான் எவனும்.
ஊதாரி யாக ஒருவன் இருப்பின்
"இவன்போல் அரசனு இராததென் பாவம்" என்
றிந்தவகை இச்சகம இயம்பி அவனை
"உதார நற்குணம உள்ளவன்" என்பர்
அதினும், திருமகளார்அருள் ஒருமுறை
போயவிடின அவன்பெரும் புகழும்போய்விடும்.
முன்னம் அவனை முகமெதிர் புகழ்ந்தோர்
அவன்கூட் டுறவினை அறவினி ஒழிப்பர்.
உண்மையில் நின்மெய்ந் நண்பனா யினன்,நீ
துன்புறுங் காலை துணைபுரிந் திடுவன்.
நீகவல் கையிற்கண் ணீர்விட் டழுவன்.
நித்திரை யுங்கொள்ளான் நீவிழித் திருப்பின்.
இவ்விதம மனாத்துயம எவ்வகைத் துயரினும்
அவனும் தாபங் கடைபவன் ஆவன்.
$அகநண் பனின்,முகம் நகமொழி பகைஞனை
அறிதற் காகுமால் அறிகுறி இவையே.

ம. கோபாலகிருஷ்ணையர்.

*உற்றுழி—ஆபத்துவந்த இடத்தில்; ○வியயம்—செலவு;
$அக நண்பனின்—உண்மையுள்ள சிநேகதனிலிருந்து.

விவேக சந்திரிகா.

ஸ்ரீகண்டபுர மென்னும் தேசத்தில், விலாஸபுரமென்று ஒரு நகர மிருந்தது. அதில் வினயசீலன் என்னு மரசன் ஆண்டு வந்தான. அவன் தன் பிராண நாயகியாகிய கமலப்ரபை என்னும் இராணியை இழந்து, பிறகு மணம் புரியாமல் போகஸ்திரீகளுடன் எப்பொழுதும் தன் காலததைக் கழித்து வந்தான். இவ்வாறு பலநாட்கள சென்ற பிறகு, அழகைக் குலைக்கும் மூப்பு அரசனை வந்து பிடிக்க ஆரம்பித்தது. அதைக் கண்டு அரசன் பயந்து "அந்தோ! பனியில் கருகிப் போன தாமரையைப் போல, வாடிப் பழுத்துப் போன என் முகத்தை என் ஸ்திரீகளிடம் எப்படிக் காட்டுவேன்! அந்தோ! விதியே! உன்னை வெல்லுவது எவராலாகும்? முதிர்ந்து திரைநத என முகத்தைக் காட்டுவதைவிட இறப்பது நலம்" எனறு துக்கித்துத் தருணசந்திரன் எனற வைத்திய நிபுணனை வரவழைத்துத் தன் குறைகளைச் சொல்லி, தான் மீண்டும் யௌவனமுற ஏதாவது உபாயஞ் செய்ய வேண்டும்" என்றான். அதைக் கேட்டு, உட்பக்கம் வக்கிரமாக விருக்கும் இளம்பிறைச் சந்திரனைப் போல, கல்ஞான மாத்ரம் பெற்று, தனவானுவதற்கு விருப்பங் கொண்டவனும், மனதில் வக்கிர ஸ்வபாவமுள்ளவனுகிப் பெயருக்குத் தக்க குணம் பொருந்தியவனுமாகிய அவ்வைத்தியன், "அரசன முழுமூடன். ஆகையால் இவனிடமிருநது கொஞ்சம் கொஞ்சமாய்ப் பணம் பறிக்கலாம்" என்று யோசித்து, "அரசே! தாங்கள் எட்டு மாதகாலம் ஒரு நிலவறையிலிருந்து மருந்து சாப்பிட்டு வந்தால் மூப்புத் தொலைந்து விடும" என்றான். இதைக் கேட்டு இறைவன் ஒரு நிலவறையை விரைவில் தயார்செய்யச் சொல்லி வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டான். நிலவறை தயாராகிவிட்டது.

மந்திரிகள், மன்னவன், வைத்தியன் வலையில். சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, "வெற்றி வேந்தே! முற்காலங்களில் முனிவர்களின் தவத்தாலும் யுகததின் பிரபாவத்தாலும் ரஸாயனங்கள் செய்யப்பட்டன. இக்காலஙகளில் அவ்விரஸாயன முறைகள் அறிய வந்திருந்தாலுமெ அவற்றிற்கு வேண்டிய சரக்குகள் கிடைக்காமையால் இப்பொழுது செய்யப்படும் ரஸாயனங்கள் நன்மை செய்வதற்குப் பதிலாக தீமையே செய்யும். ஆகையால் இக்காரி

யம் செய்வது தகுதியன்று, தீயோர் நல்லோர்க்குப் பொய்சொல்லி ஆசை மூட்டி, காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். சென்ற யௌவனம் எங்ஙனம் திரும்பி வரும்?" என்றனர்.

சிற்றின்பத்திலாழ்ந்த மூடர்க்கு யோசனை ஏது? விஷய வாசனை பலமாய் ஏறியிருந்தபடியால், அரசனுக்கு, வைத்தியன் வார்த்தைகள் ஏறினவேயன்றி இவ்வுபதேசமொழிகள் பயனற்றுப் போயின.

வேந்தன் வைத்தியன் சொற்படி தன் பரிவாரங்களை யெல்லாம் வெளியில் விட்டுவிட்டுத் தான் மட்டும் தனியாய் அந்நிலவறையில் இறங்கினான். மருந்து வகை செய்ய வைத்தியன் ஒருவேலைக்காரனோடு நிலவறையின் மேலே இருந்தான். தன் மனதிலுள்ள அஞ்ஞான விருள்போலப் பரவிநிறைந்த இருளோடு கூடிய அந்நிலவறையில் வேந்தன் வசிக்கத் தொடங்கினான். ஆறுமாதம் கழிந்தன. மன்னவன் முகம் முன்னையிலும் மிகவும் வெளுத்துத் திரை கண்டது. அது கண்ட வைத்தியன் ஒரு சூது செய்தான்: அரசனைப் போன்ற உருவமுள்ள ஒரு வாலிபனைத் தேடிப் பிடித்து வந்தான். அவனைத் தான் அரசனாக்கினால் அவன் தனது சொற்படி நடக்க வேண்டுமென்று அவனுடன் ஒப்பந்தம் பண்ணிக் கொண்டான். அவனை அந்நகரத்துக்கு வெளிப்புறம் அழைத்து வந்து ஓரிடத்தில் இருத்தினான். பிறகு ஊருக்கு வெளிப்புறமிருந்து அரசனிருக்கும் நிலவறைக்கு ஒரு சுரங்க முண்டாக்கினான். ஒரு நாள் அரசன் இரவில் தூங்குகையில் அவனைக் கொன்று அச்சுரங்க வழியாய்ப் பிணத்தை வெளியே கொண்டு போய், ஊருக்கு வெளியிலுள்ள பாழுங் கிணற்றில் தள்ளிப் பாறைகளைக் கொண்டு மூடிவிட்டான். பின்னர் தான் பேசி ஏற்பாடு செய்து வைத்திருந்த வாலிபனை அச்சுரங்கத்தின் வழியாய் நிலவறையில் கொண்டு போய்ச் சேர்த்து அச்சுரங்கத்தை அடைத்துவிட்டான்.

நாட்கள் சில சென்றதும் ஒரு நாள் காலையில் வைத்தியன் இராஜ்ய காரியஸ்தர்களை வரவழைத்து "நான் அரசனை ஆறுமாதங்களுக்குள் வாலிபனாக்கி விட்டேன். இன்னும் இரண்டு மாதங்கள் மீதியிருக்கின்றன. அதற்குள் அவர் உருவம் இன்னும் அதிகமாக மாறிவிடும். அப்பொழுது முன்னிருந்ததைவிட மகா காந்திமானாக இருப்பார். தாங்கள் யாவரும் நிலவறைவாசலில் அரசன் பேட்

டிக்கு வாருங்கள்'' என்று சொல்லி, அவர்களை நிலவறை வாசலுக்கு அழைத்துப் போய், அதிலிருந்த வாலிபனுக்குத் தான் சொல்லி வைத்திருந்த சங்கேதப்படி ஒவ்வொருவருடைய பெயரையும் உத்தியோகத்தையும் தெரிவித்து அவர்களை அடையாளங் கண்டு பிடிக்குமாறு செய்தான். இவ்வாறு அவனிடம் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு மனிதர்களை அழைத்து வந்து பரிசயம் செய்வித்தான். இம்மட்டோ? அரசனது ஸ்திரீகளைக் கூட அறியும்படி அவன் செய்தான்.

எட்டு மாதம் நிறைந்தவுடன், பலவித ஆகாரங்களை உண்டு கொழுத்துப் போயிருந்த வாலிபனை வைத்தியன் வெளியில் அழைத்து வந்து "அரசனை என் வைத்தியத்தால் வாலிபனும் மரணமற்றவனுமாக்கி விட்டேன்; அதை யாவரும் பாருங்கள்'' என்றான். இதைப் பார்த்து இராஜ்ய காரியஸ்தர்கள் ஒன்று சேர்ந்து, அரசன் வைத்தியனது ஒளஷதங்களால் யௌவனம் பெற்றதாய் எண்ணி ஆனந்தமடைந்து, அரசனைப் புடை சூழ்ந்தார்கள். பிறகு அவ்வாலிப வேந்தன் ஸ்நானஞ்செய்து சிங்காசனத்தில் உட்கார்ந்து மந்திரி முதலியவர்களைக் கூட வைத்துக்கொண்டு இராஜ்ய காரியங்களை நடத்தலானான்.

காவலன் வாலிபனானதை நகரத்தார் யாவரும் திருவிழாவாகக் கொண்டாடினார்கள். அதன்பின் அஜரான் (மூப்பற்றவன்) எனப் பெயர் பெற்ற அவ்வரசன் இராஜ்யததை ஆளவும் ஸ்திரீகளுடன் வாழ்நாளைக் கழிக்கவும் தொடங்கினான்.

கொஞ்ச காலம் கழிந்த பிறகு அஜரான், பிக்ஷக்சந்திரன், பத்மதரிசநன் என்னும் தன்னிரு தோழர்களையும் வரவழைத்துத் தனக்கு அந்தரங்க மித்திரர்களாகக் கொண்டு அவர்களுக்கு யானை, குதிரை, கிராமம் முதலியவற்றைக் கொடுத்தான். தருணசந்திரனுக்கு அவன் செய்த காரியத்திற்காக ஏதோ மரியாதை செய்தானேயன்றி அதிகம் எதும் செய்யவில்லை. தருணசந்திரன் அஜராஜன் தன்னிச்சைப்படி நடப்பதைப் பார்த்து, ஒரு நாள், "என்னை லட்சியம் செய்யாமல் இஷ்டப்படி நடக்கிறீரே? நான் தம்மை அரசனாக்கினேனென்பதை மறந்துவிட்டீரோ?'' என்றான். அஜராஜன் கொஞ்சமேனும் தயங்காமல் தைரியத்துடன், "அன்ப! நீ ஒன்றும்

தெரியாதவன் போலும்! இவ்வுலகில் ஒருவனை ஒருவன் கெடுக்கவாவது உயர்த்தவாவது எவ்வாறு இயலும்? முற்பிறப்பில் செய்த கர்மமே நமக்குப் பெருமையையும் சிறுமையையும் உண்டாக்குகிறது; சுகதுக்கங்களையும் கொடுக்கின்றன. வீண் அகம்பாவம் வேண்டாம். இவ்விராஜ்யம் எனக்குக் கிடைத்தது உன் உதவியால் அன்று. என் தவத்தால் கிடைத்துளதென அறிக. இதன் உண்மையை உனக்கு விரைவில் நேரிற் காட்டுகிறேன்" என்றான். உடனே வைத்தியன் தனக்குள் "ஏது! இவன் ஞானியைப்போல் துணிவாய்ப் பதில் சொல்லுகிறான். முன்னிருந்த அரசன் இவனினும் என் விஷயத்தில் நல்லவன். அவன் எனக்குத் தக்க மரியாதை செய்து என்னிடம் மதிப்பும் வைத்தவன். இவனுக்கு என் அயோக்யதை தெரியுமாகலின் என்பால் மதிப்பும் விசுவாசமு முண்டாவது கடினம். இவன் வெகுஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறான். ஆகையால் இவன் என்பால் எவ்விதம் நடந்துகொள்ளுகிறானோ, அவ்விதத்தை நானும் அநுஸரிப்பதே தகுதி. இராஜ்யம் தனது நற்கருமத்தால் கிடைத்ததாயும், அதன் உண்மையை நேரிற் காட்டுவதாயும் கூறுகிறானே; அதையும் பார்ப்போம்" என்று நினைத்துத் "தாங்கள் கூறுவதன் உண்மையை அறிய விரும்புகிறேன்" என்றான்.

(இன்னும் வரும்.)

பண்டிதர் எம். எம். நாராயணசாமி ஐயர்.

கமலாவதி.

அங்கம்—1.

காட்சி—2.

இடம்:— கேகயநாட்டில் அரண்மனையைச்சார்ந்த ஓர் தோட்டம்
காலம்:— மாலை.

[கமலாவதி மனக்கவலையுடன் கையில் ஓர் படத்தைப் பிடித்து ஆசனத்தின்மீது சாய்ந்திருக்க, நீலா அவளைத் தேற்றுகின்றாள்.]

கம. நீலா! "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டால் எவ்

வாறு இட்டும்?" மாளவநாட்டு இளவரசரை மணக்கும் பாக்கியம் எனக்குக் கிடடுமோ? ஒருக்காலும் முடியாத காரியம்.

நீலா. அம்மணி! ஏன் தாங்கள் வீணுக் கவலைப் படுகின்றீர்கள்? எதற்கும் காலம் வரவேண்டுமல்லவா? கூடிய சீக்கிரத்தில் கடவுள் கிருபையால் அவரையே மணப்பீர்கள் தாங்கள்.

கம. நீலா! நீ சொல்வது மிகவும் நன்றாயிருக்கின்றது. மாளவ மன்னராகிய வசந்தசேனருக்கும் என் தந்தைக்கும் முன்பு தீராப் பகை மாத்திரம் இருந்தது. இப்பொழுதோ, ஸ்ரீதரர் மாளவத்தில் இல்லாத சமயமறிந்து, அவருடைய தந்தையாகிய வசந்தசேனரை என்தந்தை சிறைப்படுத்திக் கொண்டுவந்தது நீ அறியாயோ? ஸ்ரீதரரை மறுபடியும் கனவில் நினைப்பதற்குக் கூட இனிமுடியாதே! என்னடி செய்வேன்!

[மூர்ச்சையாகிறாள்]

நீலா. இதென்ன கஷ்டமாக இருக்கின்றது.

[மூர்ச்சை தெளியச் செய்து]

அம்மணி! எழுந்திருங்கள்! "ஓர் நல்ல வஸ்துவை எவ்வளவோ பிரயாசையின் பேரில்தான் அடையலாகும். பிரயாசையின்றி அதனை அடைய முடியுமோ? ஒருக்காலும் முடியாது"

தெய்வத் தாலாகா தெனினும் முயற்சிதன்
மெய் வருந்தக் கூலிதரும்

நாமும் வேண்டிய பிரயத்தனங்களைச் செய்வோம். கட்டாயம் தாங்கள் அவர்களையே அடைவீர்கள் சீக்கிரத்தில் கடவுளது அனுக்ரஹத்தால்.

கம. நீலா! இதென்ன, சிறுகுழந்தையை ஏய்ப்பதுபோல் என்னையும் ஏய்த்துவிடப் பார்க்கிறாய் (படத்தை நோக்கி) ஆஹா! இம்மஹாநுபாவரையே நான் மணவாளராக அடைவேனுகில் என்னைப் பார்க்கிலும் பாக்கியவதி யார்?.

[பெருமூச்சுவிடுகிறாள்]

நீலா. அம்மணி! அப்பொழுதே என் வார்த்தையைக் கேட்டிருந்தால் இவ்வளவு கஷ்டம் இருந்திராதன்றோ? நான் தங்கள் தாயாரிடம் தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட்

டிருந்தேனேயானல், அவர்கள் சமயம் பார்த்து மகாராஜா விடத்தில் தெரிவித்துக் காரியத்தை எப்படியும் முடித்திருப்பார்கள். மகாராஜாவும் தாயாரும் உங்கள்மீது கொண்டுள்ள அன்பு சாமான்யமானதா? எப்படியும் அவர்கள் தங்கள் இஷ்டப்படியே நடந்திருப்பார்கள்.

கம. நீலா! என்ன வீணைகப் பிதற்றிக் கொண்டிருக்கின்றாய்? என் தந்தை என் மீது எவ்வளவு அன்புள்ளவராயினும், இவ்விஷயத்தில் மாத்திரம் இடங்கொடுக்கவே மாட்டார். மாளவமன்னருக்கும் என் தந்தைக்கும் உள்ள கொடிய பகைமையை நீ அறிந்திருந்தும் இப்படிப்பேசுகின்றாயே! (சற்று தாமதித்து)—சரி—எது எப்படியிருந்தாலும், நான் அவரையே மணம்புரிவேனேயன்றி மற்றெவரையும் கனவிலும் கருதேன். கண்ணெடுத்தும் பாரேன். இது சத்தியம்! சத்தியம்!

நீலா. (ஓர் திசையைக் காண்பித்து) அம்மணி! சற்றிருங்கள். தங்கள் தாயார் குரல் கேட்கிறதுபோலிருக்கிறதே!

கம. ஏன்! அம்மா! இதோ வந்துவிட்டேன். நீலா! நான் மாளவமன்னரை விடுதலை செய்யும்படி என் தந்தையை எத்தனையோதரம் வேண்டியும் கண்டிப்பாய் மறுத்து விட்டார் அல்லவா? இவ்விஷயம் எல்லாம் ஸ்ரீதரருக்குத் தெரியவருமானல், என்ன செய்வாரோ அவர்! அவருடைய பராக்கிரமத்திற்கு முன், என் தந்தை வலிமை எம்மாத்திரம்? ஸ்ரீதரருக்கு அஞ்சியல்லவோ அவரில்லாத சமயம் பார்த்து என் தந்தை மாளவநாடு சென்று அவரது தந்தையைச் சிறைப்படுத்தியது!.

[ஞானவல்லி உள்ளிருந்தபடியே கமலாவதியை மீண்டும் அழைக்கிறாள்]

அம்மா! இதோ வந்து விட்டேன்.

[போகிறாள்]

அங்கம்-1

காட்சி-3.

இடம்.—கோடூரசேனனது அறை. காலம் —காலே.

கோ. [மனேவியாகூலத்துடன் ஓர் ஆசனத்தில் அமர்ந்து யோசித்தவண்ணமாக]

ஹா! என் நான் இக்காரியத்தில் பிரவேசித்தேன்? நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கும் என்பது என் விஷயத்தில் உண்மையாயிற்று. இப்பிரயத்தினத்தினல் நான் அடைந்த பயன் என்ன? ஒன்றுமில்லே. நான் வீண் கர்வங் கொண்டேன். ராணி மோகனுவை எப்படியாவது ஏமாற்றி, ஸ்ரீதரன் மறுபடியும் இந்நாட்டிற்குத் திரும்பி வாராமற் செய்து, இந்த இராஜ்யத்தை நான் கைப்பற்றலாமென்று நினைத்தேன். அப்படியே அடைந்துவிட்டதாகவும் வீண் கர்வமும் கொண்டேனே! இப்படித் திடீரென்று ஆபத்து நேரிடுமென்று யார் கண்டார்கள்! ஸ்ரீதரன் இந்நாட்டில் இல்லாத சமயமறிந்து, விக்கிரமகேது இந்நாட்டின்மீது படைபெடுத்து ஜயசேனனேக் கொன்று, வசந்தசேனரைச் சிறைப் படுத்திச் சென்றுன். இன்னும் என்ன செய்யப் போகின்றுனே தெரியவில்லே? வலிமை மிக்க ஜயசேனனேக் கொன்ற விக்கிரமகேதுவை நான் எவ்வாறு வெல்லுவேன்? ஒருக்காலும் முடியாது. நான் கனவில் அவ்வாறு நினேப்பதற்கும் அருகனல்லன். சரி, இம்மட்டோடு என் ஆசை ஒழிய வேண்டியதுதான். (சற்றுத்தாமதித்து) என்ன! என் மனதை அடிக்கடி இவ்வாறு சிதறவிடுகின்றேன். அற்ப காரியம் கைகூடுவ தென்றுலும் எவ்வளவோ பிரயத்தனங்கள் செயயவேண்டியிருக்க, இலகுவாக இந்த ராஜ்யத்தைக் கைப்பற்ற நான் எண்ணியது முற்றிலும் தவறு. விக்ரமகேதுவை நான் என் வீரத்தால் வெல்ல முடியாவிட்டாலும், உபாயத்தாலாவது வெல்லவேண்டிய மார்க்கத்தைத் தேடவேண்டும். "ஆக்கப் பொறுத்தும் ஆறப்

பொருத மூடன்" போல் நான் இவ்வளவு பிரயத்தனமும் செய்து இடையில் தளர் வடைவது தகுதியன்று.

[மோஹனு பரபரப்புடன் பிரவேசிக்கிருள்.]

அம்மணி! ஏது தாங்கள் இந்த வந்தது? என்னை வரும்படி கட்டளையிட்டிருந்தால் உடனே வரமாட்டேனு நான்?

மோ. நீர் அங்குவந்தாலென்ன, நான்இங்குவந்தாலென்ன! எல்லாம் ஒன்றுதான். (பதட்டத்துடன்) கொடேசேனரே! ஐயோ! இப்படி ஆபத்து வருமென்று நினைக்கவில்லையே கனவிலும். விக்ரமகேது என் பிராணநாதரை உயிருடன் வைத்திருக்கின்ருனே என்னவோ! ஏதோ—நீர் என் பிராணநாதரை மீட்பதற்கு ஓர்ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகச் சொன்னீரே, அது எம்மட்டிலிருக்கின்றது? இன்னும் எவ்வளவு காலம் செல்லும், என் பிராணநாதரை மீட்பதற்கு?

[அழுகிருள்]

கோ. அம்மணி! அழாதேயுங்கள். என்ன செய்யலாம்? நானும் அதற்கு வேண்டிய பிரயத்தனங்களையே செய்து கொண்டிருக்கின்றேன். அவசரப்பட்டு என்ன செய்கிறது? விக்கிரமகேதுவை நான் நமது சைன்யத்துடன் எதிர்த்துப் போரில் வென்று மகாராஜாவைச் சிறைமீட்ப தென்றுல் சாத்தியமான காரிய மில்லையே! ஏதாவது ஒரு உபாயத்தால் தான் விக்கிரமகேதுவை வெல்ல வேண்டி யிருக்கிறது.

மோ. என்ன செய்வீரோ—எனக்குத் தெரியாது. என் பிராணநாதரை மாத்திரம் எப்படியேனும் சிறை மீட்டு விடுங்கள். இச்சமயத்தில் எனக்கு இங்கு உதவி செய்ய உம்மைத் தவிர வேறு ஒருவருமில்லை. நான் உம்மையே நம்பியிருக்கின்றேன்.

கோ. அம்மணி! கவலைப்படாதேயுங்கள் என்னுல் கூடுமானவரையில் பிரயத்தனங்கள் செய்து பார்க்கின்றேன் மகாராஜாவை மீட்பதற்கு.

[ஆசனத்தை விட்டெழுந்து]

மோ. உமக்குச் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை நான் சென்று வருகின்றேன்.

கோ. கவலையின்றிப் போய் வாருங்கள்.

[மோஹனா போகிறாள்]

"எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்" போல் எனக்கு இக்கஷ்டமும் கூடச் சேர்ந்து கொண்டது. அப்பா— மகாராணியை நான் சமாதானம் செய்வதிலேயே என் காலத்தைக் கழிக்க வேண்டி யிருக்கிறது. இருக்கட்டும். என் காரியம் கைகூடுவதை நான் கவனிக்க வேண்டும். அது வரையில் நான் இவளுக்கு நயமொழிகள் கூறியே வர வேண்டும்.

[போகிறான்]

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

சாணக்ய சாகஸம் அல்லது
சந்திரகுப்த சரித்திரம்.

(21-ம் பக்கத் தொடர்ச்சி.)

சந்திரகுப்தன் அன்னசத்திர விசாரணையைச் சரிவர நடத்திக் கொண்டுவரும்போது, ஒரு நாள், தண்டு கமண்டலங்கள் ஏந்திய திவ்ய காந்தியுடன் கூடிய சரீரத்தோடு சாணக்யன் என்னும் அந்தணன் அச்சத்திர வழியாக நைமிசாரண்யம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். நடுமத்தியான வேளையில் பசிதாகத்தாலும் பயணத்தாலும் களைத்திருந்த அவனைக் காய்ந்த புற்செடி ஒன்று இடறிக் கீழ்வீழ்த்தியது. வீழ்ந்ததவே, அவன் கடுங்கோபங் கொண்டு "ஆ! அசேதனமான இவ்வற்பப் பூண்டினால் நமது பயணம் தடைபட்டு நாமும் வீழ்கிறதா? இதோ இதை நிர்மூலமாக்குகிறேன்" என்று தன்கைத்தண்டத்தால் அதனை வேருடன் கல்லித் துணுக்குத் துணுக்காய்ச் சேதித்துச் சாம்பலாக்கி மேலே செல்லலாயினன்.

இவனது தேஜஸையும் செய்கையையும் கண்ட சந்திரகுப்தன், சாணக்யனண்டை சென்று, அவனை நமஸ்கரித்து, "ஸ்வாமி! நடும் பகல் ஆய் விட்டது. ஐயோ! மிகவும் களைப்புற்றிருக்கிறீர்கள். பழம் முதலியன அருந்தி இளைப்பாறிப் பிறகு செல்லுக" எனப் பிரார்த்தித்தான்.

சாணக்யன் அவ்வேண்டுகோளை மறுக்கமாட்டாமல் ஒத்துக் கொண்டான். உண்டு இளைப்பாறியவுடன் பயணமாக வேண்டுமென அவன் ஆதியில் தீர்மானித்திருந்தும், சந்திரகுப்தன் காட்டிய அன்பும் நற்குணமும் அவனை நாலைந்து தினங்கள் அச்சத்திரத்திலேயே இருத்திவிட்டன. அவனது உபசரணை யாதியவற்றைக் கண்டும், நுகர்ந்தும் மகிழ்ந்த சாணக்யன் அவனது குலம் கோத்திரம் முதலியவற்றை விசாரித்தான். நவநந்தர்கள் மௌரியர்க்குச் செய்த மகாபாதகம் முதலிய யாவும் சாணக்யனுக்கு விவரமாக எடுத்துரைத்தான் சந்திரகுப்தன். அன்றியும், அவன் தந்தை மௌரியன் காசியிற் பிரதிஷ்டித்த விருபாக்ஷ ஸ்வாமிக்கு, நின்றுபோயிருக்கும் அபிஷேக ஆராதனை கூட நடத்தமுடியாமல் தான் இருக்கும் பரிதாப நிலைமையையும், நந்தர்கள் தன்னை உட்படுத்தியுள்ள ஹீனஸ்திதியும் அத்துரோகிகளால் தனக்கு என்றேனும் முடிவு நேரிடக் கூடும் என்று தனக்குள்ள அச்சத்தையும் அறிவித்துக் கண்ணீர் பெருக்கித் தன்னையும் அவனுடன் நைமிசாரண்யம் அழைத்துச் செல்லுமாறு இரந்தனன்.

சாணக்யனுக்கு இளகிவிட்டது மனம். அவன் சந்திரகுப்தனை நோக்கி "ஆ! ஆ!! நன்று கூறினை! அரசனது பௌத்திரனும், ராஜலக்ஷணம் குறைவறப் பொருந்தியவனுமான நினக்கோ வனவாசம் தக்கது? உன் கண்ணீரால் யாது பயன்? உனது சத்துருக்களின் இரத்தத்தைப் பூமியில் எங்கும் இறைத்தாலல்லது, அவர்களால் துர்மரணமடைந்த உன் பிதுர்க்களுக்கு நீ இறைத்த எள் நீரால் ஒரு போதும் தாகசாந்தி ஆகாது! ஆகாது" என்று கூறிப் பெருமூச்செறிந்தனன்.

தன்பால் அநுதாபங்காட்டிப் பேசிய சாணக்யனை நோக்கிச் சந்திரகுப்தன், "மகானுபாவரே! சிறிய தீப்பொறி வாயுவினுதவி பெற்று விடுமாயின் பெரிய காட்டையும் கொளுத்தாதா? தங்கள் கடாக்ஷ வீக்ஷண்யம் சிறிது எனக்குக் கிடைத்து விடுமாயின், சத்துருநாசம் ஓர் பிரமாத காரியமோ?" என்றான்.

சாணக்யன் "உன் சத்துருக்களைப் போல் பலகோடிப் பேர்களை நிக்ரகிக்க எனக்கு ஆற்றல் உண்டு. ஆயினும், நந்தர்கள் பந்துவிரோதத்தால் உனக்கு மட்டும் துரோகிகளாயினரே யன்றி எனக்கு எவ்வகைத் தீங்கும் இழைக்கவில்லையே! நான் அகாரணமாய் அவர்களை நிக்ரஹிப்பது நியாய விரோதத்திற்கும் அபக்யாதிக்கும் காரணம் ஆகுமே. தக்க காரணம் ஏற்படுமாயின், உனக்கு அபயமளிப்பதில் தடையில்லை" என்று மொழிந்து நீராடச் சென்றான்.

சின்னாழிகைக் கெல்லாம், முன்பு வேட்டைக்குச் சென்றிருந்த நந்தர்கள், வரும் வழியிலிருந்த இவ் அன்ன சத்திரத்தைக் கண்டு, பிராம

ணர்கள் போஜனப்பந்தியைப் பார்க்கவிரும்பி உள்நுழைந்தனர். இதற்குள் நீராடச்சென்ற சாணக்யன் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, தான் உடுத்தியிருந்த கந்தை வஸ்திரத்துடனே உட்புகுந்து, அங்கு ஓர் பொற் பீடத்தில் உட்கார்ந்தான். சாணக்யன் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருப்பதை நந்தர்கள் கண்டதும், கடுங்கோபம் கொண்டனர். 'தாசன் என்றும், பிராமண அதமன்' என்றும் பலவாறு தூஷித்து, அவனைக் கர கர வென்று கையைப் பிடித்து இழுத்து வெளியில் தள்ளும்படி ஏவலாட்களுக்குக் கட்டளையிட்டனர். தள்ளுண்ட சாணக்யன் சினந்து, அவர்கள் செய்த அக்கிரமங்களை நன்குரைத்து "அதமர்காள்! என்னைவைது, இழுத்தெறியச் சொன்ன உங்களை ஸம்ஹரித்துக் கால்களிற் கயிறுகட்டிக் கழுகு, நாய், நரி, பிசாசங்கட்கு உணவாகும்படி உங்கள் சவங்களை இனி நான் இழுத்தெறியச் செய்வதை இச்சனங்கள் பார்க்கப் போகிறார்கள். உங்களை ஸம்ஹரித்தபின்பே கால ஸர்ப்பம்போல அவிழ்ந்திருக்கும் இவ்வெனது சிகையைக் கட்டுவேன்" என்று கோரப் பிரதிக்ஞைகளைச் சபதபூர்வகமாகச் செய்து, மீசைமுறுக்குவது போல் தலைமயிரை உருவிக்கொண்டு அவ்விடம் விட்டகன்றான்.

அப்பொழுது ஜனங்கள் மனம் நடுக்குறும்படிப் பல துர்நிமித்தங்கள் தோன்றின. யாவரும் "ஐயோ! இப்பிராமணன் யாது காரணம் பற்றி இவ்விடம் வந்தானோ? என்னென்ன ஸம்பவிக்கப்போகிறதோ?" என்று ஏங்கித் தவித்துக் கொண்டே தத்தம் வீடு புக்கனர்.

கோபத்துடன் எழுந்து சென்ற சாணக்யன், சந்திரகுப்தன் ஓடி வருவதையும், ஆரண்யத்திற்குத் தன்னையும் அழைத்துச் செல்லுமாறு நமஸ்கரித்து வேண்டியதையும் கண்டு, உள்ளமகிழ்ந்து, அவனுக்கு அபயம் அளித்து, அவனை நோக்கி "நந்தர்களைச் சங்கரித்து உனக்குப் பட்டாபிஷேகம் செய்தபின்பே தபோவனம் செல்வேன்" என்று உறுதி கூறினான். பிறகு அவனை ஓர் தனி இடத்திற்கு அழைத்துச் சென்று "நந்தர்களுக்குச் சத்துருக்கள் யாவர்? மித்துருக்கள் யாவர்?" என்று விசாரித்தான்.

சந்திரகுப்தன், "ஐயா காசி தேசாதிபதியும், மச்ச தேசாதிபதியும் மித்திரர்கள். காஷ்மீர, மலய, ஸிந்து, குலூத, பாரஸீக, காம்போஜ, சீன, ஹூண, தேசாதிபதிகளுக்குத் தலைவனான பர்வதேசுவரன் அவர்களுக்கு உதாசீனபக்ஷத்தைச் சேர்ந்தவன். இவன் ராக்ஷஸனை ஒருகாலத்தில், ஒரு காரணம் பற்றி மித்திரனாகக் கருதினவன். ஆயினும் அவன்தான் மாயச் சிங்கம் பாடலிபுரத்திற் கனுப்பினவன்" என்றான். இவ்வாறு சாணக்யன் சந்திரகுப்தனைப் பற்பலகேள்விகள் கேட்டு, பாதராயணன் முதலிய

அஷ்ட லோகாதிபதிகளும் மௌரியனுக்கு வேண்டியவர்கள் என்பதையும் ராக்ஷஸன் அதிவீரனென்பதையும், அறிந்து, எங்ஙனமேனும் நந்த ஸம்ஹாரத்திற்குப் பின் ராக்ஷஸனைச் சந்திரகுப்தனது மந்திரியாக்கத் தீர்மானித்தான்:

பிறகு சாணக்யன் சமயோசிதமாய் ஓர் பொய்க் கடிதம்எழுதி, சந்திரகுப்தனிடம் ரகசியமாய்ச் சிற்சில கூறி, அவனை நோக்கி "மைந்த! இக்கடிதத்தை உன்தந்தையால் அன்புள்ளவரான அஷ்டலோகாதிபதிகளுக்கும் காட்டி நான் சொல்லிக் கொடுத்தது போற் சொல்லு. அவர்கள் அதை நம்பவேசெய்வர். அவர்கள்முன்னிலையில நான்சொல்லிக கொடுத்த விதம் நீ பதில் கடிதம் ஒன்று எழுதிக் கையெழுத்திடு. அதன்கீழ் இரண்டாமுறை உனக்குக் கற்பித்தவிதம் எழுதி, அவர்கள் சம்மதிக் கையெழுத்தை வாங்கிக் கொண்டு, ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல ஹைமிசாரண்யத்திற்கு வா. அங்கு இந்துசர்மன் வீட்டில் இருப்பேன்" என்று அவனை அனுப்பிவிட்டு அங்கு போயினன்.

சாணக்யன் சென்றதும், சந்திரகுப்தன், ரகசியமாய்ப் பாகுராயணன் முதலியயோரைக கண்டு சாணக்யன் சொல்லிக் கொடுத்ததைக் கண்ணும் கண்ணீருமாக அவர்களிடம் கூறித் தனது கையிலிருந்த கடிதத்தை அவர்களிடம் கொடுத்தான். அவனது துக்கத்திலைக் கண்டு அவர்கள், "ஐயா உனது தந்தை எங்கட்குச் செய்த உதவியை ஒரு போதும் மறவோம். இக்கடிதம் எழுதிய காசி வர்த்தகனான கேசவதாஸ் கூறுவது உண்மையே. தகப்பன் செய்யத் தொடங்கிய புண்ணிய கைங்கிரியத்தை நிறைவேற்ற நினைத்துள நீ நீடூழிவாழ்க. உன் தகப்பனும், எங்களைக் காத்து வந்தவருமான மௌரியர் கேசவதாஸனிடம் நம்பி ஒப்புவித்த திரவியங்களைக் கொண்டு காசியில் விருபாக்ஷஸ்வாமிக்குத் திருப்பணி அபிஷேகம் முதலியன உன் விருப்பிற்கிணங்க அவன் செய்வதில், எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. "இவ்விஷயத்தில் பாகுராயணாதி லோகாபதிகளுக்கு முழுச சம்மதமே" என்று அறிவித்துப் பதில் கடிதம் உடனே எழுது. நாங்களும் எங்கள் சம்மதிக் கையெழுத்திடுகிறோம்" என்றனர்.

என்னலும், சந்திரகுப்தன்கேசவதாஸனுக்கு, "நின்றுபோனதேவாலயகாரியத்தை முடிப்பது உன் பொறுப்பு. நீ யெழுதிய கடிதத்தை அஷ்டலோகாதிபதிகட்கும் காட்டினேன். அவர்களும் இதனடியில் தங்கள் சம்மதியை அறிவித்து அடியிற் கையெழுத்திட்டிருப்பது காண்க. இங்ஙனம் சந்திரகுப்தன்" என்று கையொப்பமிட்டு, அவர்களிடம் அக்கடிதத்தைக் கொடுத்தான்

உடனே ஸேநாபதிகள் எண்மரும் "சந்திரகுப்தன் ஏற்பட்டுச் செய்யும் இப்பெருங் காரியத்தில் எங்களுக்குள்ள 'பூர்ணசம்மதத்தை இக்கடித மூலம் அறிவிக்கிறோம். இதைச் சந்தேகம் சிறிது மின்றி அறிக. இங்ஙனம்: ஸேநாதிபதிகளான ஸிம்மபலன், பலகுப்தன் பாகுராயணன், விஜயவர்மன், பத்ரபடன், லோஹிதாஸன், டிங்கிராதன், புருஷதத்தன் என்று எழுதித் தேதியும் குறித்து அவனை ஆசீர்வதித்து விடை கொடுத்தனுப்பினர்.

உடனே சந்திரகுப்தன் அக்கடிதத்துடன் வீடுவந்து சேர்ந்து தன் தாயையும் மனைவியையும் ஓர் இடத்தில் மறைந்து வசிக்குமாறு செய்து, அவர்களிடமிருந்து பிரியாவிடைபெற்று, நைமிசாரணியம் சென்று, சாணக்யனைக்கண்டு நமஸ்கரித்துத் தானும அஷ்டஸேநாதிபதிகளும் சேர்ந்தெழுதிய கடிதத்தைக் கொடுத்தான்.

சாணக்யன் அக்கடிதத்தைப்படித்து "சந்திரகுப்தன்" என்றுகையெழுத்து இடப்பட்டிருக்கும் வரி உள்பட, மேலே உள்ளவிஷயம் அடங்கிய பாகத்தை, அதிசாமர்த்தியமாய்க் கிழித்தெறிந்து விட்டான். ஆகவே இப்பொழுது கடிதத்தில் உள்ள விஷயம் "சந்திரகுப்தன் ஏற்பட்டுச செய்யும் ... ... சந்தேகமின்றி அறிக" என்பதும், அதனடியில் எண்மர் கையெழுத்துமே.

இக்கடிதத்தைப் பத்திரப்படுத்தினன் சாணக்யன். பிறகு அவன்தன் நண்பன் இந்து சர்மனிடம், பாடலிபுரத்தில் தனக்கு நிகழ்ந்த யாவையும் கூறித் தன் சபதத்தையும் அறிவித்து, சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம செய்வதாகத் தான் கொடுத்திருக்கும் வாக்குறுதியையும் தெரிவித்து, இவையாவும் இனிது நிறைவேற அவன் உதவியை வேண்டினன்.

இந்துசர்மன் இவையாவும் நிறைவேறத் தான் எவ்விதத்தும் உதவி செய்வதாக ஸத்தியம் செய்து கொடுத்தான். கொடுக்கவும், சாணக்யன் "நந்த நிக்ரஹம் முதல், ராக்ஷஸனைக் காத்தல் வரை" இந்துசர்மன் பாடலிபுரத்தில் நடத்தவேண்டிய காரியங்களையும், அவற்றிற்கான உபாயங்களையும் அறிவித்து, தான், நந்தஸம்ஹாரத்தின் நிமித்தம் பர்வதேசனிடம் செல்வதாகவும், இந்துசர்மன் பாடலிபுரத்தில் செய்து வருங் காரியங்களை ரகஸ்யமாகத் தனக்கு அப்போதைக் கப்போது தெரிவிக்கவேண்டுமென்றும் கூறினன்.

பிறகுசாணக்யன் இந்துசர்மனது சிஷ்யன் இருவருடனும், சந்திரகுப்தனுடனும் பர்வதேசனது தலைநகரான காஹுஜரி நகர்க்குப் பிரயாணமாயினன். இந்து சர்மனும் தனது சிஷ்யர்களில் ஐவருக்கு மாஸோபவாஸி, ஸித்தார்த்தகன், வேகசர்மன், ஸமித்தார்த்தகன், பகுஸோமன், என்று

பெயரிட்டு, அவர்களுடன் பாடலிபுரம் வந்து சேர்ந்தான். இச்சிடர்ஐவரும் வைத்தியர் ஜோதிடா மாந்தரீகா முதலியோரது வேஷங்களுடன் பாகுராயணன் முதலிய அதிகாரிகளிடத்தில் தத்தம் சாமர்த்தியங்களைக் காட்டி அவர்களுடன் நெருங்கிப் பழகி ஆங்காங்குள்ள அந்தரங்கங்களை, அறிந்து வந்தனர். இந்துசர்மன் ஓர் பௌத்த சந்யாஸி வேஷத்துடன "ஜீவஸித்தி" எனப் பெயர் பூண்டு, ராக்ஷஸனுக்கு நண்பனாகி, அடிக்கடி நந்தர்களுடன்சம்பாஷித்துக் கொண்டும், தேசத்தாரது நிலைமை, எண்ணம்,முயற்சி முதலியவற்றை அறிந்து, சாணக்யனுக்கு ரகசியமாய் உடனுக்குடன் அறிவித்துக் கொண்டும், அதிஜாக்ரதையாக இருந்து அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தான். நிற்க.

பாடலிபுரத்தில் நடந்த ஒவ்வொரு சமாசாரமும் ஒற்றர்கள் மூலமாய் பருவதேசன அறிந்து, நந்தர்களின் குரூரச் செய்கைகளையும் சந்திரகுப்தனது கருணை, வலிமை முதலியவற்றைப் பற்றியும், சாணக்யனது சபதம், தீர்மானம் முதலியவற்றைப் பற்றியும் தன் மந்திரியாகிய சபரவர்மனுடன் வெகு நாழிகை சம்பாஷித்துக் கொண்டிருந்தான்.

இதற்குள்ளாக லம்பாக தேசாதிபதி கிரிவர்மன் தனது சேனையுடன் பர்வதேசுவரனது நகரை நெருங்கி விட்டதை அறிந்து, பர்வதேசுவரன் திடுக்கிட்டுத் தன்கீழுள்ள பல காட்டு மன்னர்களையும் நகர்க்கு வெளியில் முக்கிய ஸ்தானங்களில் தம் சேனையுடன் நின்று கிரிவர்மனை எதிர்க்கவும், தனது ஆட்கள் நகரைக் காக்கவும் கட்டளையிட்டான். அவர்களும் அங்ஙனம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

இச்சமயம் சாணக்யன் சந்திரகுப்தனுடன் பாவதேசனிடம் சென்றான். பர்வதேசன் அவர்கள் வரவை ஏற்று, யோகக்ஷேமம் விசாரித்து "வந்த காரியம் என்ன?" என வினவினன். சாணக்யன் பர்வதேசனிடம் தான் தனித்திருக்கும் சமயத்தில், பாடலிபுரத்தில் நிகழ்ந்தன யாவும் கூறித் தனது சபதமும் சந்திரகுப்தப் பட்டாபிஷேகமும் இனிது நிறைவேறுமாறு அவனது பேருதவியை வேண்டுவதாக அதிசாமர்த்திய மொழிகளால் அறிவித்தான். பிறகு அவன், "ராக்ஷஸன் ஒருவனைத் தவிர யாவரும் சந்திரகுப்தனையே அபேக்ஷித்து நந்தர்களை வெறுக்கின்றனர்," எனவும் "சந்திரகுப்தன் ஏற்பட்டிருக்கும் இக்காரியத்தில் எங்களுக்கும் பூரண சம்மதம். இதைச சந்தேகம் சிறிதுமின்றி அறிக." என்று அஷ்டலேகாதிபதிகளும் கையெழுத்திட்டுத் தந்த கடிதம் இது" என்றும் கூறி, அவர்கள் கையெழுத்துடன் கூடிய அக்கடிதத்தைப் பர்வதேசனுக்குக் காட்டினன்.

கடிதம் கண்ட பர்வதேசன் தனது மந்திரிமார்களான உலூகன், சபரவர்மன் என்னும் இருவருடனும் வெகுநாழிகை தனித்திருந்து யோசனை

செய்து பிறகு சாணக்யனிடம் வந்து "நீங்கள் வந்திருப்பது துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டே. ஆயினும், இப்பொழுது உங்கள் காரியத்தை முடிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்! பழைய பகையை மனதில் வைத்து லம்பாகாதிபதி கிரிவர்மன் தக்க துணை பலத்துடன் என் மீது தண்டெடுத்து வரும் சமய மன்றோ இது? ஆகையால் அவனை நிக்ரஹித்து விட்டு உங்கள் காரியத்தைப் பற்றி யோசித்து செய்யக் கூடியதைச் செய்கிறேன்" என்றான். சாணக்யன் சிறிது நேரம் சிந்தித்து "வேந்தே! கிரிவர்மனைக் குறித்துச் சிறிதும் அஞ்சேல். இக்ஷணமே ஓர் நியோகியை என்னிடம் அனுப்புக. நான் சொல்லுமாறு செய்ய அவனுக்குக் கட்டளையிடுக. பிறகு நடப்பதைப் பார்" என்று கூறித் தனது விடுதி வந்து சேர்ந்தான். (இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஊ) தாடொழார், சீர்உரையார் சாக்கியனார் கல்எறிந்தும்
வாடாத வீடுறலென்? வள்ளுவரே!—நாடில்
பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(அ-ம் முதலியன):— தாள் தொழார் – (எவருங்காணச் சிவபெருமானது) திருவடிகளை வணங்கினவரல்லர்; சீர்–சிறப்பு; வாடாத–அழியாத, வீடு–முத்தியுலகு. பொறி......நெறி–மெய் முதலிய பஞ்சேந்திரியங்களையும் வழிகளாகவுள்ள ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தினிடத்தும் செல்லுகின்ற ஆசை ஐந்தினையும் அற வொழித்தவனான கடவுள் கூறியுள்ள நன்னெறியாகிய வேதமார்க்கத்தில்.

சாக்கியனார் வீடுற்றது:— புத்த மதத்திற் பிறந்தும் சிவபக்தியிற் சிறந்த சாக்கிய நாயனார் தமது இனத்தார்க்கு அஞ்சியும், தமது பிறப்பிற் கர்க வருந்தியும், வெளிப்படையாய் சிவனை மலர்கொண்டு அர்ச்சியாமல், கல்லால் எறிந்து அக்கல்லையே மலராகப் பாவிக்கும்படி மெய்யன்போடு பூசித்தனர். சிவபெருமான் இவரது பக்திக்கு மெச்சி முத்தியளித்தனர்" என்பதே.

(எ) பண்டிதவஞ் செய்தும் கவலைப் படலென்னே
வண்டாரு காவனத்தார்? வள்ளுவரே!—தொண்டாய்த்
தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

(அ-ம் முதலியன):— வனி தாருகாவனத்தார்—வளப்பம் பொருந்திய தாருகாவன ரிஷிகள்; தொண்டாய் — அடியார்களாகி; சேர்தல் — இடைவிடாது நினைத்தல்; மனக்கவலைக்குக் காரணம் — பிறவிக்கு ஏதுவாகிய காமவெகுளி மயக்கங்களை நீக்காமை. அரிது—முடியாது

தாருகாவனத்தார் கவலைப்பட்ட விவரம்:— ஒரு காலத்தில் தாருகாவன முனிவர்கள் சிவபெருமானை மதியாது நின்றனர். அவர்களுக்கு நற்புத்தி வருவிக்கவும் அவர்களது மனநிலையை அறியவும் கருதிச் சிவபிரான் ஒரு விட புருஷ வடிவுடன் அவர்கள் இல்லந் தோறும் பலி ஏற்றனர். உடனே அம்முனிவரது பத்தினிமார்கள் கற்புநிலைக்குப் பங்கம் வந்துவிட்டது. அதுகண்ட முனிவர்கள் காமவெகுளி மயக்கங்களால் பீடிக்கப்பட்டவர்களாதலின், மனக்கவலை கொண்டு அபிசார யாகம் இயற்றி, நாகம், பூதம், மான், புலி, யானை, முயலகன், வெண்டலை முதலியவற்றைத் தோற்றுவித்துச் சிவனைக் கொல்லுமாறு ஏவினர். இவற்றிற் சிலவற்றை அணிகளாகவும், சிலவற்றை உடையாகவும் சிவன்கொண்டு முயலகனை மிதித்து வெண்டலையைத் தலையிற் கொண்டனர்.

(அ) ஆயிரத்தெட் டண்டமர சாண்டானும் வெஃகியதென்
மாயாச் சுராபதியை? வள்ளுவரே!—ஆயின்
அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

(அ-ம் முதலியன)— 1008 அண்டம் அரசாண்டான் — சூரபத்மன்; வெஃகியது என்? — அடைய விரும்பியது யாது காரணம். மாயா — நித்யமான, சுராபதி — தேவருலகு; ஆயின் — ஆராய்ந்து பார்க்கின்; அற ஆழி அந்தணன் — அறக்கடலாகிய கருணையங்கடவுள்; பிற ஆழி — (இவ்வுலகில் எய்தக் கூடிய முப்பொருள்களுள் அறம்ஒழிந்த) ஏனைய இரண்டுமாகிய பொருள், இன்பம் இவற்றைப் பற்றிய ஆசைக்கடல்; அரிது—முடியாது.

சூரபத்மன் சுரர் பதியை இச்சித்தது:— மகா வரப்பிரசாதியான இவ்வசுரன் 1008 அண்டங்களை 108 யுகங்கள் ஆண்டதோடு திருப்தி கொள்ளாமல், இந்திராதி தேவரைச் சிறையிலிட்டு அமராவதியையும் ஆள விரும்பினன். இவனது முழுவரலாற்றையும் கந்த புராணத்திற் கண்டு அறிக.

(க) தீர்த்தரும் போற்றும் சிறுவிதிக்காட் டுத்தலைதான்
வாய்த்ததென்னோ தன்கலைபோய்? வள்ளுவரே!—பார்த்தக்
கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் [கால்
தாளை வணங்காத் தலை.

(அ-ம் முதலியன) — தீர்த்தர் — பரிசுத்தமுள்ள பெரியோர்; போற்றும் — புகழும்; சிறு விதி — தக்ஷன், கோள் இல்—(தத்தமக்கு ஏற்ற புலனை உணர்ச்சிகளைக) கொள்ளுதல் இல்லாத; பொறியின் — பஞ்சேந்திரியங்களையும் போல; குணம் — பயன், எண் குணத்தான் — ஸ்வதந்தரம், சுத்த சரீரம், இயற்கையறிவு, முற்றுணர்வு, இயற்கையிலே பாசமின்மை, பேரருள், அழியாவலிமை, அளவிலா ஆனந்தம் ஆகிய இவற்றைக் கொண்ட கடவுள்.

சிறு விதிக்கு ஆட்டுத்தலை வாய்த்தது.—பிரமனது குமாரனாகிய தக்ஷனுக்கு அவனது வேண்டுகோட்படி உமாதேவியார் புத்திரியாயினர். தாக்ஷாயணி எனப்பேருற்ற அம்மகளை அவன் சிவபிரானுக்கு மணஞ்செய்து கொடுத்தனன். பிறகு அவருக்கும் தக்ஷனுக்கும் மனஸ்தாபம் நேரவே, மகளையும் மருமகனையும் தக்ஷன் மதிக்கவில்லை. தான் பெரிய யாகஞ் செய்த காலத்தும் சிவபிரானுக்கு அவிர்ப்பாகம தரவில்லை. அவ்யாகத்திற்குத் தக்ஷன் அழையாமலே உமாதேவியார் தாமே வலியச சென்றனர். அப்பொழுது தக்ஷன் உமையையும் சிவனையும் இழித்துரைக்கவே, அது பொறாத அம்மையார் அக்கினிப் பிரவேசஞ் செய்தனர். இஃதறிந்த சிவபெருமான் அகோர வீரபத்திரரைத் தோற்றுவித்துத் தக்ஷனையும் அவன் செய்த யாகத்திற்கு உடந்தையாய் இருந்தோரையும் வெவ்வேறு விதமாகத் தண்டித்தனர். தக்ஷன்தலை துணிக்கப்பட்டு யாகத்தீயில் இடப்பட்டது. பிறகு அவன்மேற் கருணை கூர்ந்து ஆட்டுத்தலை ஒன்று அவன்கழுத்திற் பொருத்தப்பட்டது.

(௰) சாயா இரணியனும் சாய அவன்இளம்சேய்
மாயாநல் வாழ்வுறலென்? வள்ளுவரே!—ஆயின்
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

(அ-ம் முதலியன):— சாயா – அழிவடைதற் கருமையான; சாய— இறக்க; சேய்–மகன்: பிரகலாதன், மாயா—நித்யமான; ஆயின்—ஆராயின்; பிறவிக்கடல்—ஜனன ஸாகரம்; இறைவன்—கடவுள் சேர் – இடைவிடாது நினை: "நீந்துவர்" என்பதற்கு "இறைவனடி சேர்ந்தவர்" என்பது தோன்ற எழுவாய்.

இரணியன் சாய்வும் அவன் சேய் வாழ்வும் உற்றது:— செல்வம், வலிமை முதலியவற்றால செருக்குற்றுப் பகவானை விஷ்ணுவைத் துவேஷித்து, யாவரும் தன்னையே வணங்கும்படி செய்துவந்த இரணியகசிபு என்பவனுக்கு விஷ்ணுபக்தியிற் சிறந்த பிரகலாதன் என்ற ஓர் மகன் தோன்றினன். தன் விருப்பிற்கும் கட்டளைக்கும் விரோதமாக நடந்து கொண்ட மகனுக்கு இரணியன் கொடிய தண்டனை பல விதித்தும் பயன் படாமற் போயிற்று. பகவந் பக்தியால் எவ்விதத்திலும் அழிவுறாமல் நின்ற அவனை சினந்து, இரணியன், "நீகூறும் விஷ்ணு "எங்கும் உளன்" என்றாயே. இத்தூணில் உள்ளனோ? உளனாயின் என்னெதிரில் வரட்டும்" எனறு ஒரு தூணை நோக்கி உதைய பக்தன் சொல்லை மெய்ப்பிக்க அத்தூணினின்றே பகவான் தோன்றி இரணியனை மாய்த்துப் பிரகலாதனுக்கு நித்யவாழ்வு ஈந்தனன். இவ்வரலாற்றைப் பாகவதத்தினின்றும் விவரமாக அறிந்துணர்க.

இரண்டாம் அதிகாரம்.

வான் சிறப்பு.

(க) மாய்ந்தன மீண்டும் வழிவழித் தோன்றற்கு
வாய்ந்தமருந் தியாதோ? வள்ளுவரே!—ஆய்ந்தக்கால்

வான்நின் றுலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

(அ-ம் முதலியன):— வான்—மழை: நின்று — ஓயாமற் பருவகாலங்களில் பெய்து வருவதால்: உலகம் — உலகில் உள்ள சகல ஜீவராசிகளும். வழங்கி—ஜீவித்து: தான்—அம்மழை: அமிழ்தம்—மரணம் ஒழிக்கும் மருந்து: உணரற் பாற்று—அறிந்துணரத்தக்கது.

(உ) ஊண் அன்றோ காப்ப துடலே. உயர்வானம்
மாண்அமிழ்தம் ஆவதெங்ஙன்? வள்ளுவரே!—காணவே
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை

(அ-ம் முதலியன)·— ஊண்—உணவு: வானம்—மழை: மாண் — சிறந்த, துப்பார்க்கு—உண்போர்க்கு: துப்பு ஆய—நன்மையாகிய துப்பு ஆக்கி—உணவுப் பொருள்களை உண்டாக்கி; துப்பார்க்கு — (அவற்றை) உண்போர்க்கு: துப்பு ஆய தூஉம்—தானும் உணவாயிருப்பதும்.

(ங) உற்றநோய் நோலா தொளிர்தா மரைமூலம்
மற்றெழுவர் நாடியதென்? வள்ளுவரே!—நற்றவர்க்கும்
விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

(அ-ம் முதலியன):— நோய்—வருத்தம்: நோலாது—பொறுக்காமல்: ஒளிர்—பிரகாசமுள்ள; மூலம்—கிழங்கு, நாடியது—விரும்பித்தின்றது; விண்—மழை; நின்று பொய்ப்பின் — மோசஞ்செய்துவிடுமாயின்; விரி நீர் வியன் உலகத்துள்—விசாலமான் கடல் சூழ்ந்த இப்பேருலகில்: நின்று—நிலையாய் நின்று: உடற்றும் — வருத்தும்.

(ச) காடன் வரகு கலந்தமண் கொண்டு முன்பு
வாடிஎயில் ஆக்கியதென்? வள்ளுவரே!—நாடுங்கால்
ஏரின் உழாஅர் உழுவர், புயல் என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(அம் முதலியன): காடன் — இடைக்காட்டுச்சித்தர்: எயில்—மதில்: நாடுங்கால்— ஆராயுமிடத்து: ஏரின்—கலப்பைகொண்டு; உழாஅர் —உழுது பயிரிடமுடியாது: புயல்—மழை: வாரி—வருமானம்: வளம் — பயன்: குன்றிக்கால்—குன்றியக்கால் என்பதன் குறை.

காடன் வாதுகலந்த எயில் ஆக்கியது:— சோதிடத்தில் வல்ல இடைக்காட்டு சித்தர் கிரகங்களின் நிலைமையை உணர்ந்து இனிவரப் போகும் பஞ்சத்தை முன்னறிந்து 12 வருடங்கட்கு உணவுப் பொருளாகக் கூடிய வரகை மண்ணொடு கலந்து சுவர்வைத்துக் கோட்டைகட்டிப் பஞ்சகாலத்தில் அவ்வுணவால் உயிர்வாழ்ந்த விஷயமே இங்குக் குறிக்கப்பட்டதாகும். முழுவரலாற்றையும் புலவர்புராணம் முதலியநூல்களிற் கண்டு கொள்க.

(ௌ) சின்னாடு வற்கடத்தால் தேய்தலும், பன்னாடு
மன்னி வளர்தலுமென்? வள்ளுவரே!—உள்ளில்
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

(அ-ம் முதலியன): சில்நாடு—சிலதேசங்கள், வற்கடம்—பஞ்சம், மன்னி—நிலையாக, உன்னில் – யோசித்தால், கெடுப்பதும் – பெய்யாமையால் ஒரு நாட்டினரைக் கேடுறசெய்வதும், சார்வு ஆய்—துணையாய நின்று, எடுப்பதுவும்—பெய்வதால் நிலைநிற்கச் செய்து காப்பதும்.

(சு) தண்டகன் ஆண்ட தனிநாடு, பின், கானல்
மண்டுசுரம ஆயதென்னோ? வள்ளுவரே! —தண்டா
விசும்பிற் றுளி வீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(அ-ம் முதலியன)— தனிநாடு (மதுமந்தம் என்ற) ஒப்பற்றநாடு: கானல் மண்டு சுரம்— வெப்ப மிகு பாலைவனம், தண்டா—நீங்காத, விசும்பின் துளி—மேகத்தினின்று வரும் மழைத்துளிகள்: புல் தலை—ஓர் அறிவு உயிராகிய புல்லினது தோற்றமும்.

தண்டகன் தனிநாடு சுரமானது'— இக்ஷுவாகுவின் மகனாகிய தண்டகன் தந்தைக்கு மாறாக நடந்துகொண்டமையின், அவனால் விந்தமலைசாரலுக்குஓட்டப்பட்டான் அம்மலைச்சாரலில் அவன் மதுமந்தம் என்னும் நகரை ஆக்கி ஆட்சிபுரிந்து வந்தான். தனது ஆசானாகிய சுக்ரனமகள் அரசையை வலிதிற் புணர்ந்த குற்றத்தால் அவன் நாடு மழை வளங்குன்றி மண்மாரியால் அழியுமாறு சுக்கிரனால் சபிக்கப்பட்டது.

(எ) மீனீர் மணிமுதல மேவு நெடுங்கடலும்
மாநிலத்தைக் காவாதோ? வள்ளுவரே!— ஆனா
நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

(அ-ம் முதலியன) மீனீர்—மீன், நீர், முதல—முதலியன, மேவும்—பொருந்திய, ஆனா—அழியாத, நீர்மை-ஜலசரங்கள் மணிமுதலியவற்றைத் தோற்றுவிக்கும்) தன்மை. குன்றும்—குறையும்: தடிந்து—முகந்து (சூரியவெப்பத்தால் நீர் ஆவியுருக்கொண்டு சொல்லலாற குறையும் படிசெய்து, எழிலி-மேகம்; நல்காதாகிவிடின்—அக்கடலுக்கு மழையாகக் கொடாவிட்டால்.

☞ ஓர் வேண்டுகோள்:— 3—ஆவது செய்யுளில், "எழுவர் தாமரைமூலம் நாடிய வரலாறு" எமக்கு அறிவிக்குமாறு நம்பத்திரிகாபி மானிகளை வேண்டுகிறோம்.

ம. கோ.

விடுகதை வினா.

நீண்டவுட லோடிருக்கும் நேர்படமும் கொண்டிருக்கும்
தீண்டின் விரைந்தெழும்பிச் சீறிவிடும்—யாண்டுமது
தந்திரத்தாற் கட்டுண்ணும் தக்கமணி வாய்ந்திருக்கும்
சுந்தரமார் நாகமன்று சொல்.—செல்லம்மாள்.

விநோதக் கூற்று.

சிறிது ஆங்கில அறிவு பெற்று ஆராய்ச்சியில் தான் நிபுணர் என அறியாதாரை ஏமாற்றித் திரியும் தமிழ்ப்பண்டிதன் ஒருவனுக்கும் அவன் மகனுக்கும் நடந்த சம்பாஷணை.

தந்தை:—ஸ்காட் லாண்ட், லாப் லாண்ட் – இவற்றின் பெயர்க்குக் காரணம் தெரியுமா?

மகன்:—தெரியாது.

தந்தை:—'லாண்ட்' என்றால் 'நிலம்' அல்லது 'நாடு', ஆகையால் ஸ்காட் லாண்ட் – ஸ்காட் (ஜாதியாரது) நாடு; அப்படியே லாப் லாண்ட்–லாப் (ஜாதியாரது) நாடு. தெரிந்ததா? வேறு உதாரணம் இவை போற் கூறு.

மகன்.—கம்பர் லாண்ட்.

தந்தை:—எப்படி?

மகன்.—லாண்ட்-நாடு; கம்பர்லாண்ட்-கம்பர் நாடு ராமாயணம், சடகோபரந்தாதி இவற்றின ஆசிரியரையும் அவர் இருந்த ஊரையும் அறியார் உளரோ?

தந்தை:—(சந்தோஷத்துடனும், சந்தேகத்துடனும், 'அபிதானசிந்தாமணி' யைப் புரட்டி, அதில் அப்பெயர் காணாது) மூட்டாள்! இங்ஙனம் குயுக்திசெய்ய எங்குக் கற்றாய்? இந்தியாவில் தென்னாட்டிற் பிறந்த கம்பரூர் இங்கிலாந்தில் வடபாகத்தில உள்ள ஓர் ஊர் என்கிறாயே.

மகன்:—ஐயா! கோபியாதேயும். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தங்கள் மகன் வேறு யாரிடம் கற்கவேண்டும்! இப்பொழுது இந்தியாவின் தென்கடைசியில் உள்ள ஓர் இடப்பெயரை, முன் வடகடைசியில் உள்ள ஓர் இடத்தின் மரூஉ என்று பிரசங்கம் செய்தும், தற்காலத்தில் உள்ள ஓரிடத்தை முற்காலத்திருந்த அரசன் பெயருடனாவது, மலை, நதி முதலியவற்றின் பெயருடனாவது, சிரமப்பட்டுப் பொருத்தி, நூற்றுக்கணக்கான பக்கம் கொண்ட புத்தக ரூபமாக வெளியிட்டும் உள்ள, தாங்கள் பண்ணும் வியாக்யானங்களுக்கு, என் யுக்தி அதிகமாகவா போய்விட்டது? போனால்தான் என்ன தவறு? "தந்தையினும் சதமடங்கு தநயன்" என்பது தாம் அறியீரோ?

ரா. ராகவஸ்வாமி.

உபாத்தியாயர்:— வருஷப்பாடம் முடிந்து விட்டது. அடுத்தவாரம் பரீக்ஷை. வினாப்பத்திரங்களை அச்சிட அனுப்பிவிட்டேன். ஏதாவது சந்தேகமிருந்தால் இப்பொழுதே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒருமாணவன்:—எந்தப் பிரஸ்ஸில் ஸார் கொஸ்சன் பேப்பர்களை ப்ரிண்டு பண்றா?— ரா. பரமேசுவரன்.

ஸ்ரீமதி பண்டிதை கிருஷ்ணவேணி அம்மை:— சில மாதங் கட்குமுன், இவ்வம்மையும் இவரது சகோதரி பதுமாவதி அம்மையும் மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்திலும் பிறவிடங்களிலும் உபந்யாஸஞ் செய்ததை நம்நேயர்கள் அறிவர். இம்மாதம் 2உமுதல் இவ்வம்மை மறுபடியும் மதுரைவந்து பல பிரசங்கங்கள் செய்தனர். விவரம் வருமாறு:—

உபந்யாச விஷயம்	இடம்	அக்ராஸநர்ஸ்ரீ:
ஆலயவழிபாடு	நன்மை பரிபாலனசபை	—
நல்வாழ்வு	அமெரிக்கன் காலேஜ் தமிழ்ச சங்கம்	ஜே. எம். நல்லசாமி பிள்ளை பி. ஏ. பி. எல்.
அறஞ்செய்விரும்பு	ஸௌராஷ்ட்ரஹை ஸ்கூல் தமிழ்ச சங்கம்	எல். கே. துளசிராம் பி. ஏ. பி. எல்.
கற்றுய்ந்தொழுகல்	ஷை	ராவ்பகதூர் டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள்
ஒற்றுமை	குமரன் திருவருட்சங்கம்	கல்யாணசுந்தரபட்டர்
அன்புடைமை	கே. எஸ். என். பெண் பாடசாலை	—
பெண்கல்வி	,,	—

இவ்வம்மையின் பிரசங்கங்களைப் பற்றிய வியப்புக் கவிகளிற் சில இனிவரும்.

மகாசிவராத்திரி நாடகங்கள்:— கே. ஸ்ரீநிவாச பிள்ளை வகையராவால் நந்தனார் சரித்திரமும, K. G. A. D. சபை யாரால் "விகட வைத்யன்" "மஞ்சுளா" வும், "மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்க" த்தாரால் "மார்க்கண்டேய நாடக" மும் மகாசிவராத்திரி யன்று நடிக்கப்பட்டன.

சென்னை ஸுகுணவிலாஸ சபை.— இதன் 25-வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் சென்னையில் கவர்னரது அக்ராஸநத்தின் கீழகொண்டாடப்பட்டது. ஸ்ரீ சம்பந்தமுதலியார் வாசித்த சபைவரலாற்றினின்றும் அச்சபையில் இப்பொழுது 1300 அங்கத்தவர்கள் இருப்பதும், அது பல நற்காரியங்களுக்கு நன்கொடை யளித்திருப்பதுமறிந்து மகிழ்கின்றோம்.

ஸ்ரீமதி வி. பாலம்மாள்:— தமிழில் பாண்டித்யம் மிக்க பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மை மதுரைமாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் கௌரவஅங்கத்தினருள் ஒருவராக இருக்கும் விஷயம் தமிழுலகறியும். இப்பொழுது ஸம்ஸ்கிருதத்திலும் கன்னடத்திலும் பாண்டித்தியம் மிக்க ஸ்ரீமதி வி. பாலம்மாளையும் இச்சங்கம் கௌரவ அங்கத்தினருள் ஒருவராகப்பெற்றுளது மகிழத்தக்கதே. இவ்வம்மை 26உ ஞாயிற்றுக்கிழமை மாலை "பெண்மக்களுக்குரிய படிப்பு" என்பதைப்பற்றி ஸ்ரீ: ம. கோபாலகிருஷ்ணையரின் அக்ராஸநத்தின் கீழ் ஓர் பிரசங்கம் செய்வர்.

காகித கிராக்கியால் நோந்துள கஷ்டம்:— ஏற்கனவே பழம் பத்திரிகைகளுள் ஒன்றாகிய "மான்செஸ்டர் கொரியர்" நின்றுபோன விஷயம் யாவரும் அறிவர். இப்பொழுது இங்கிலாந்தில் காகித வரத்துப் போக்கின்மையாலும், வியாபாரவிருத்தி குறைந்துள காரணத்தால் விசேஷ விளம்பரங்கட்கு அவசியம் இல்லாமற்போய் விட்டதாலும், 60 வருஷங்களுக்குமுன்தோன்றிய „ஸ்டாண்டர்டு" என்றஅதிபிரபல்ய இங்கிலீஷ் பத்திரிகை நின்றமை விசனிக்கத்தக்கதே-இன்னும் பழைய பத்திரிகைகளில் 6 கூடிய சீக்கிரத்தில நின்றுவிடுமெனக் கேட்க மிக விசனிக்கிறோம.—பத்திராதிபர்.

பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மாள் அவர்களின்
பிரசங்கத்தைப் பற்றிய வியப்புக் கவிகள்.

ஸ்ரீ: ம. கோபாலகிருஷ்ணையர் இயற்றியவை.

ஸ்ரீமதிபண் டிதை அசலாம் பிகை 'கல்வி' யினைப்பற்றிச் செப்பக்கேட்ட
ஸ்ரீமதியாம் உமையவளும் மலைமகளாய்ச் சிலை மகளாய் வீற்றிருந்தாள்
நாமகளும் வெட்கி உடல், உடைபணி ஆதிய வெளுத்தாள் நாளும்; சோணி
மாமகளும முனனிற்க மாட்டாமல அலைமகளாய் வயங்கினளே.

பண்டிதையே பலர்சொல்லக் கேட்டிருப்பேம், ஆயினும்இப்பான்மையாகப்
பண்டிதைஸ்ரீ மதிஅசலாம்பிகை போலப் பிரசங்கம் பண்ணினர் யார்?
கண்டிதரா மும்பிரசங் கம்செயலாம் எனநினைந்தேம் கருத்தழிந்தேம்
கண்டிதைநேர் இனிமைமிகுபொருளாமோ? மெய்யுரைமின் கலைவல்லீரே

ஔவைமுத லியபலநல் லிசைப்புலமை மெல்லியலார் அக்காலத்தில்
திவ்வியசெந் தமிழ் நாட்டில் திகழ்ந்தனரெனபதைநன்கு தெரிக்குமாறே
எவ்வமிலாப் புகழுடனும் வந்துலகு நலம் பெறச் செய் எம்பெருமான்
ஔவியமில கல்விநலம ஆர் அசலாம்பிகை புகழே அணிந்துவாழி.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினரும்
மதுரைக் காலேஜ உதவித் தமிழ்ப் பண்டிதருமாகிய,

ஸ்ரீ நா. கனகராஜையர் கூறியவை.

அசலாம் பிகை நாம அம்மைநமக காக
விசனுந்த காரம் விலக்கி - இசையருளும்
கல்விப் பெருமையினைக் கட்டுரைத்தார் வாழியவர்
எல்லையறு காலம் இவண்

இமயகிரி அரையன்மனம் இயற்றுதவத் துதித்தருளெம் இறைவியான
உமையவள்தன் கணவனருள் தமிழ்மொழியில் உளநூல்கள் ஒருங்குகற்று
சமயமிடம் அறிந்துபல பிரசங்கம் அவரவர்க்குத் தக்கவாங்கீந்த
அமையவாகள் எனைநிகர்வோர்த் தெருட்டிநலம் உறுகஇந்த அவனிமீதே